வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW 17 |
| நாள் | : | 30.08.2023. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அண்ணாமலை | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1, 2, 4 முதல் 6 ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் சரலம்பாக்கத்தில் குடியிருக்கிறேன். சிமெண்ட் கலவை செய்யும் வேலை செய்கிறேன். அத்திமஞ்சேரி டவுனுக்கு தேநீர் அருந்துவதற்காக நான் சென்றேன். ஆறு வருடத்திற்கு முன்பு நான் சென்றிருந்தபோது போலீசார் இரண்டு நபர்களை அங்கே விசாரித்து கொண்டிருந்தார்கள். தனசேகரனை கொன்றவர்கள் என்று அவர்கள் கூறினார்கள். அங்கியிருந்து ஏரிகரைக்கு அழைத்து சென்றார்கள். அங்கே ஒரு கத்தியும், ஆளுக்கு ஒரு செல்போனும் எடுத்து கொடுத்தார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். காண்பிக்கப்பட்ட அதசாஆ 36 முதல் 38 வரை உள்ள கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள கைரேகை என்னுடையது அவை **அதசாஆ 40 முதல் அதசாஆ 42** ஆகும். அதன் பிறகு நான் வேலைக்கு சென்றவிட்டேன்.

**குறுக்கு விசாரணை**

சாட்சி தட்சணாமூர்த்தி எனக்கு அண்ணன் முறை ஆகும். அமாவாசை எனக்கு மைதுனர். தனசேகரனின் தகப்பனார் தனசாமி எனது மாமா ஆகும். அன்று கையொப்பம் செய்தோம் தற்போது தான் வருகிறோம். வேலைக்கு செல்வதற்கு முன்பாக காவல் நிலையத்தில் சென்று கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அன்று 9 மணிக்கு வேலைக்கு சென்றவிட்டேன். நான் தனசேகரனின்

உறவு என்ற காரணத்தினால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக கையொப்பம் மட்டும் செய்தேன் வேறு எதுவும் தெரியாது என்றால் சரிதான். சுமார் மூன்று காகிதங்களில் கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை - இல்லை**

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW 16 |
| நாள் | : | 30.08.2023. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தட்சணாமூர்த்தி | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1, 2, 4 முதல் 6 ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் கரலம்பாக்கத்தில் குடியிருக்கிறேன். பெயிண்டிங் வேலை செய்கிறேன். அத்திமஞ்சேரி பேருந்து நிறுத்தத்தில் 30.03.2018 அன்று காலை 10 மணியளவில் நானும் அண்ணாமலையும் நின்றுகொண்டிருந்தோம் அப்போது முரளி மற்றும் லோகநாதன் ஆகியோரை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். தனசேகரனின் கொலை சம்பந்தமாக அவர்களை விசாரித்தார்கள். அவர்கள் கொலை செய்ததாக ஒத்துக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து இரண்டு கைபேசிகள் கைப்பற்றப்பட்டன. போலீசார் ஓட்டஏரிகரைக்கு எங்களை அழைத்து சென்றார்கள். முரளி சிறிய கத்தி ஒன்றை எடுத்து கொடுத்தார். வெள்ளை கைப்பிடி கொண்ட சிறிய கத்தியை சாட்சி அடையாளம் காண்பித்தார். அது **சா.பொ. 7(P.I No.49/18 )**ஆகும். காண்பிக்கப்பட்ட முரளி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ 35**. மூன்று கைப்பற்றுதல்கள் மகசர்கள் **அதசாஆ 36** முதல் **அதசாஆ 38** வரை ஆகும். சாமிநாதன் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது அது **அதசாஆ 39** ஆகும். சாமிநாதனிடமிருந்து கைப்பற்றப்பட்ட கத்தி **சா.பொ. 8**

**(P.I No.42/18 )** ஆகும். அதன்பிறகு எங்களை அனுப்பிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

இறந்த தனசேகர் எனக்கு மாமா முறை. ஒரு முறை காவல் நிலையம் சென்றேன். காவல் நிலையம் சென்றபோது மூன்று கையொப்பங்கள் செய்தேன். எழுதி வைத்திருந்த தாளில்களில் கையொப்பம் செய்தேன். அச்சடித்த காகிதத்திலும் கையொப்பம் செய்தேன். கையொப்பம் போடசொன்னார்கள் போட்டேன் படித்து பார்க்கவில்லை. நான் பெயின்டர் வேலை செய்கிறேன். 10 மணிக்கு கையொப்பம் செய்தேன். 10.45 மணியளவில் வேலைக்கு சென்றுவிட்டேன். நான் காவல் நிலையத்தில் தனசேகரின் சொந்த காரர் என்ற முறையில் கையொப்பம் செய்தேன் என்றாலும் அத்திமஞ்சேரி பேருந்து நிறுத்ததில் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்று சான்று பொருட்களை கைப்பற்றியதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் அதுபோல் எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த பொருளும் யாரும் என் முன்னிலையில் எடுத்துக்கொடுக்கவில்லை என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | : | SC 71/2020 |
| வழக்கு சாட்சி | : | PW 15 |
| நாள் | : | 30.08.2023. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அமாவாசை | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

( எதிரிகள் 1, 2, 4 முதல் 6 ஆஜர்.)

**முதல் விசாரணை**

நான் தாங்கலில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். பொதட்டுர்பேட்டைக்கு கூலிவேலைக்கு 5 ,6 வருடங்களுக்கு முன்பாக நானும் ரமேஷ்சும் சென்றபோது கூட்ரோட்டில் நின்றுக்கொண்டிருந்தோம் அப்போது போலீசார் அங்கே ஒன்றாக நின்று கொண்டிருந்தார்கள். பொதட்டூர்பேட்டை ஆய்வாளர் குற்றவாளி ஒருவரை விசாரித்துக்கொண்டிருந்தார். அங்கே எதிரிகள் முரளி மற்றும் சம்பத் இருந்தார்கள். அவர்கள் தனசேகரனை கொன்றதாக கூறிய வாக்குமூலத்தில் என்னிடம் ஆய்வாளர் கையொப்பம் வாங்கிகொண்டார். பள்ளிப்பட்டிலிருந்து சோளிங்கர் செல்லும் வழியில் ஓட்டேரியில் கணவமோட்டில் தனசேகரனை கொன்றுபோட்டதாக கூறினார்கள். எங்களை கணவமோட்டிருக்கு ஆய்வாளர் அழைத்துவந்தார் அங்கே ஏரி அருகில் உள்ள புதரில் மரம் அறுக்கும் வாளை எதிரிகள் சம்பத் மற்றும் முரளி எடுத்துக்கொடுத்தார்கள். காண்பிக்கப்பட்ட மஞ்சள் கருப்பு கலர் உள்ள பிளாஸ்டிக் கைப்பிடியுடன் இணைக்கப்பட்ட இரும்பு வாள் எடுத்துக்கொடுத்தார்கள் அது **சா.பொ. 6 (P.I No.50/18 )** ஆகும். காண்பிக்கப்பட்ட பெருமாள் என்பவரின் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள கைரேகை என்னுடையது அது **அதசாஆ 33 மற்றும் அதசாஆ 34** ஆகும். அங்கியிருந்து 3 கி.மீ தொலைவு உள்ள

காட்டுபகுதியில் தனசேகரன் கொன்றுபட்டிருப்பதாக கூறிய காரணத்தினால் ஆய்வாளர் அந்த பகுதிக்கு என்னையும் ரமேஷ்யையும் அழைத்து சென்றார். அங்கே மலை பகுதி ஒடையில் தனசேகரனின் பிரேதத்தை பார்த்தோம். ஓடைக்கு மேலே பிரேதத்தின் மீது மஞ்சு (ஓடை அருகே விளையும் புல்) போட்டிருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என்னை காவல' நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். ஆனால் கொலை செய்த இடத்திலேயே விசாரித்தார்கள். காவல் நிலையத்தில் நாலைந்து தாள்களில் கைரேகை வைத்தேன்.

மறுவிசாரணை - இல்லை.